y-m-CA

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 11 றஜப் 7 இதழ்: 273
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-1-1991

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் அமளிதுமளி
## அண்ணா தி. மு. க. உறுப்பினர் கூட்ட தொடரில் கலந்துகொள்ளத் தடை

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று நடந்த பெரும் அமளிதுமளியில், சபாநாயகர் தாக்கப்பட்டதுடன், அவரின் சால்வையும் இழுத்துச் செல்லப்பட்டது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா தி மு. க. உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத் தொடரில் கலந்துகொள்ளக் கூடாதெனச் சபாநாயகர் உத்தரவிட்டார்.

சட்டப் பேரவையில் அ. இ. தி. மு. க. குழுத் தலைவர் திரு. ஆர். ராதா சட்டப் பிரச்சனை ஒன்றை கிழப்பிய போது சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் மீது தாக்குதல் 5 பேர் பலி! 70 பேர் காயம்

(டெல்அவில்)

இஸ்ரேல் தலைநகர் டெல் அவில்மீது ஈராக்கிய 'ஸ்கட்' ஏவுகணைகள் 3 தாக்கிபெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்

[4-ம் பக்கம் பார்க்க]

## ★ வட்டுக்கோட்டையில் பொம்மர் தாக்குதல்

# பெண், இரு வயோதிபர்கள் பலி

# 10 வீடுகள் 5 கடைகள் சேதம்

(வட்டுக்கோட்டை)

**வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை நடந்த பயங்கர பொம்மர் தாக்குதலில் ஒரு பெண், இரு வயோதிபர் உட்பட மூவர் பலியானார்கள். இத் தாக்குதலில் பத்து வீடுகளும், ஐந்து கடைகளும் பலத்த சேதமடைந்துள்ளன.**

நேற்றுக் காலை 7-40 மணி முதல் 7-50 மணி வரை வட்டுக்கோட்டைப் பிரதேசத்தைச் சுற்றி, இரண்டு பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசியதில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு பலியானார்.

இரண்டு பொம்மர்களும் மாறிமாறி வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திக்கு முன்பாக இருக்கும் வீதியைச் சேர்ந்த பகுதிகளில் மூன்று குண்டுகளை வீசின.

(4-ம் பக்கம் பார்க்க)

## மேஜர் தாரணிக்கு புலிகள் வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவனிலிருந்து நேற்று மாலை வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் பிரிவைச் சேர்ந்த மேஜர் தாரணி [மதிவதனி சுப்பிரமணியம் பூநகரி] வீரமரணம் அடைந்துள்ளார்.

[4ம் பக்கம் பார்க்க]

நான்காவது நாளாக

## வல்லையில் விமானத் தாக்குதல் கோவில்கள், வித்தியாலயம் சேதம்

(வடமராட்சி)

நான்காவது நாளாக வல்லைமீது தாக்குதல் நடைபெற்றது. நேற்று (23-1-91) புதன்கிழமை அதிகாலை முதல் மாலைவரை வல்வெட்டித் துறைமீது சகடை, அவ்ரோ விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் கடும் தாக்குதலைமேற் கொண்டன.

மேற்படி தாக்குதலின் போது வல்லை நெடியகாட்டுப் பகுதியே பெரும் தாக்

(4-ம் பக்கம் பார்க்க)

## தனியார் மருந்துச்சாலைகளுக்கு மருந்து வகைகள் 'லங்காசிறியில்' வரும்

(யாழ்ப்பாணம்)

லங்காசிறி கப்பல் இன்று கொழும்பில் இருந்து 2,600 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும்.

மேற்படி கப்பலில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு 35 ஒட்சிசன் சிலிண்டர்களும், மருந்துப் பொருள்களும் மற்றும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலை

(4ம் பக்கம் பார்க்க)

குமண கப்பல்

## கொழும்புக்கு 27-ல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் இம்மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித் துறையிலிருந்து கொழும்பு நோக்கிப்புறப்படுகிறது.

இந்தக் கப்பலில் 23 நோயா

(4-ம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறையில்

## இரு படையினர் பலி ஒருவர் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து வெளியே வர முயன்ற சிங்கள இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஒருவர் காலை இழந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்கள் அனைவரும்

## தற்கொலை படையாக மாறி மேற்குலகநிலைகளை அழியுங்கள்! ஈராக் அரசு கோரிக்கை

[பாக்தாத்]

உலகிலுள்ள மேற்குலக நாடுகளின் சகல நிலைகள் மீதும் முஸ்லிம்கள் அனைவரும் தற்கொலை படைகளாக மாறி தாக்குதலை நடாத்துமாறு ஈராக்கிய பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இத்தகவலை நேற்றுக் காலை பாக்தாத் றேடியோ பலதடவைகள் ஒலிபரப்பியது. இதற்கான பிரேரணையை ஈராக் பாராளுமன்றம் அங்கிகரித்துள்ளது.

இதேவேளை பன்னாட்டு படையிலிருந்து பொருக்கோ விலகிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. தனது 3000 படை வீரர்களையும் உடனடியாக திருப்பியழைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. [கி]

பயணிகள் மீது

## இராணுவம் தாக்குதல்

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற பயணிகளை வவுனியாவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அடித்துக் கலைத்ததாகக் கூறப்படுகிறது.

இதேநேரம் வவுனியா நகரில் நின்ற பொதுமக்கள் மீது நண்பகல் 12-00 மணியள

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி-வடக்கு முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. வி. அரிச்சந்திரன், அரசடி லேன், தாவடி வடக்கு, கொக்குவில், (சி-4282)

எம்மிடம் ஆறு பன்னிரெண்டு கலர் கொண்ட கலர் பென்சில் பெட்டிகள், அல்பம் (சிறிய) முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விசேட கழிவு உண்டு. 390' ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்திக்கு அருகாமையில் (சசிகாந்தன் ஸ்ரோர்ஸ் முன்னால் யாழ்ப்பாணம். (கி-4286)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்களை, கொப்பி, பத்திரிகை, கோழித்தீன், சிமெந்து உறை, உரைப்பை, பித்தளை, செம்பு வாங்கப்படும் விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி இலங்கை வங்கிக்கு முன்லேன் யாழ்ப்பாணம், (கி-4287)

### பாலாஜி புத்தகசாலை

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலை புத்தக உபகரணங்கள், ராணிமுத்து, ராணி காமிக்ஸ் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 15/6 முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (கி-4289)

## தொழிற்பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்.

சகல இன றேடியோ, ரெலிவிசன். வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம் 4 மாதம்

★ றீவைண்டிங்

மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம் 4 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்

வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம் 2 மாதம்

★ SPOKEN ENGLISH

| | |
|---|---|
| (1) Vocabulary | (4) Writting |
| (2) Basic Grammar | (5) Conversation |
| (3) Reading | (6) Etiguette (Manners) |

★ TOEFL

காலம் 2 மாதப் பிரத்தியேகமாக தனிப்பட்ட மாணவர்களுக்கும் குறுகியகாலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

★ எயர் கொண்டிசன் றிப்பியறிங்

சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம் 4 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:

**27-01-91 (சனி, ஞாயிறு)**

**28-01-91 (கிழமை)**

தொழில் புரிவோருக்கு விசேட சனி, ஞாயிறு வகுப்புகள் நடாத்தப்படும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(ஏ 1055)


## இராசிபலன்

24-01-1991

வியாழக்கிழமை

மேஷம்: அதிகாரம். பொருள்பேறு, குடும்ப கௌரவம்.

இடபம்: நல்லோர் சினேகம், குடும்பவிரோதம், பணப்புழக்கம்.

மிதுனம்: அனுகூலம், தொழில்லாபம். குடும்பசுகம்.

கடகம்: இனசனப்பகை, இல்லத்தில் சுபகாரியம். அலைச்சல்.

சிங்கம்: பகைவர் தொல்லை. குடும்பபகை. காரிய தாமதம்.

கன்னி: ஏமாற்றம், உடல் உபாதை, வாகன விபத்து.

துலாம்: புதிய உறவு, கல்வியால் பெருமை, தொழில் பாராட்டு.

விருச்சிகம்: மனைவியால் புகழ், தொழில் மாற்றம், வாக்கு பலிதம்.

தனுசு: குடும்ப கவலை, தொழில் மந்தம், பயணங்களால் செலவு.

மகரம்: காரிய தாமதம், பணமூலமான கவலை, வைராக்கியம்.

கும்பம்: தொழில் லாபம், பணியாள் உதவி, குடும்ப உல்லாசம்.

மீனம்: கருத்து மோதல், விரோத உணர்வு, குடும்பச் சச்சரவு.

ஜோஸ்யர்

## கேரதீவில் மூழ்கி தனங்கிளப்பில் மிதந்தது

(தனங்கிளப்பு)

கேரதீவு. சங்குப்பிட்டித் துறைமுகம் ஊடாகக் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டு காணமல் போன தேங்காய் எண்ணைப்பரல்கள் தனங்கிளப்பு கோவிலாக்கண்டிக் கடல் கரைகளிலும் ஒதுங்கிய போது கிராமவாசிகளால் மீட்கப்பட்டு விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

பிரஸ்தாப தேங்காய் எண்ணைப் பரல்களைக் கட்டியிழுத்துக்கொண்டு வரும்போது கட்டி இழுத்துக்கொண்டு வந்தவரில் ஒருவர் கடல் விபத்தில் சிக்கி மரணமானார்.

இதன்பின் சில தேங்காய் எண்ணைப் பரல்கள் காணமல் போய்விட்டன. பின்னர் தனங்களப்புக் கடலில் இரு பரல்களும், கோவிலாக்கண்டிக் கடலில் நாலு பரலுமாக மீட்கப்பட்டதாகவும் தெரியவந்தது. விபத்தில் மரணமானவர் பூநகரியில் உள்ள பரமன்கிராய் வாசியாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

## கசிப்புத் தொழிற்சாலை புலிகளால் கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

தெல்லியன்குளத்தின் காட்டுப்பகுதியில் உள்ள கசிப்பு தொழிற்சாலை ஒன்று விடுதலைப்புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. கசிப்பு வடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரையும் விடுதலைப்புலிகள் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகளுக்கு அண்மையில் தினமும் கசிப்பு விற்பனைசெய்யப்படுவதை அறிந்த விடுதலைப்புலிகளின் துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் திரு. அத்தார் தலைமையில் சென்ற புலிகள் தெல்லியன் குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியை அண்டியுள்ள குடிசை ஒன்றில் வடிசாராயம் காய்ச்சி விற்பனை செய்வதைக் கண்டுபிடித்தனர்.

வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்ததுடன் அதைக்காய்ச்சுவதற்கு பாவிக்கப்பட்ட பொருட்களையும் காய்ச்சிய சாராயத்தையும் எடுத்துச் சென்றனர். (83).

## நிதி உதவுமாறு துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கு மாகாண மாணவர்களுக்கு உதவும் பொருட்டு துணைவேந்தர் நிதியத்துக்குப் பொது மக்கள். நலன் விரும்பிகள், நிதி உதவுமாறு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ. துரைராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது துணைவேந்தர் நிதியத்திலிருந்து 50 மாணவர்களுக்கு மாதாந்தம் 400ரூபா வீதம் வருடம் முழுவதும் வழங்கப்படவுள்ளன.

214 கிழக்கு மாகாண மாணவர்களுக்கும் மற்றும் வட மாகாணத்தைச் சேர்ந்த சில மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்க துணைவேந்தர் நிதியத்துக்குப பணம் தேவைப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## வேலைத் திட்டங்கள் முன்னேற்றம் ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்பற்றி ஆராய்வதற்கான கூட்டம் இம்மாதம் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11மணிக்கு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி கூட்டத்திற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களும், யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களத் தலைவர்களும், மற்றும் சபைத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர், (153)

## கீரை விதை இலவசம்

(யாழ்ப்பாணம்)

இலவசமாகக் கீரை விதை பெற விரும்புவோர் சுயவிலாசமிட்டு ஒரு ரூபா அஞ்சல் முத்திரை ஒட்டிய உறை அனுப்பி யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்,

## வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

தைப்பூச புனித தினத்தன்று பாலகர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கவுள்ள சபைகள், சங்கங்கள், மன்றங்கள் தேவையான அரிச்சுவடி ஏடுகளை மில்க்வைற் நிறுவனத்தில் நேரில் அல்லது எழுத்துமூலம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளுமௌத் தெரிவிக்கப்படுகிறது.

## தாக்குதலில் கை துண்டிப்பு

[நல்லூர்]

சாவகச்சேரியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் ஒருகையை இழந்த நிலையில் செபஸ்ரி அம்மா என்னும் ஐம்பத்தொன்பது வயதுப்பெண்மணி முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்பு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (152)

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(திருமலை)

திருகோணமலை தம்பலகாமம் கோயில் குடியிருப்பு அகதி முகாம்களில் இருந்து வரும் 5000 அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை,

## மாயமாய் மறைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், முத்திரை சந்தை; கல்வியங்காடு, திருநெல்வேலி பகுதிகளில் வியாபாரம் செய்த மண்ணெண்ணை வியாபாரிகளை கடந்த சில தினங்களாக காணமுடியவில்லை,

மண்ணெண்ணெய் லீற்றர் 30 ரூபாவுக்கு மேல் விற்கக் கூடாதென்ற வர்த்தக சங்கத்தினரின் அறிவுறுத்தலையடுத்து இவர்கள் மாயமாய் மறைந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆயினும் மேற்குறிப்பிட்ட இடங்களில் ஆங்காங்கு பெற்றோல் வியாபாரிகள் மாத்திரம் காணப்பட்டனர். (க)

# வளைகுடா யுத்தம் 7வதுநாளாக தொடர்கிறது

## 8,000 தடவைகள் தாக்குதல்

[பாக்தாத்]

★ ஈராக்-குவைத்மீது அமெரிக்கசார்பு நேசப்படைகள் 8,000 தடவைகள் விமான தாக்குதல் நடத்தியிருப்பதாக அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

★ வளைகுடாப்போர் தொடங்கியதிலிருந்து இதுவரை சுமார் 17 ஈராக்கிய ஜெட் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் இதேவேளையில் அமெரிக்கப்படைகள் தரப்பில் 19 ஜெட் விமானங்களை இழந்திருப்பதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஜோஜ் புஷ் கருத்து

★ ஈராக்கிய ஆக்கிரமிப்பிலிருந்து குவைத் விடுவிக்கப்பட்ட பின்னர் பாலஸ்தீனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டியதிசையை நோக்கிய செயலை உலகநாடுகள் உணர்த்திடவேண்டும் என்று அமெரிக்க அதிபர் தெரிவித்திருக்கிறார்.

★ இத்தாலியப் பிரதமருடன் நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்க அதிபர் ஜோஜ்புஷ் தொலைபேசியில் பேச்சுக்கள் நடத்தினார். பன்னாட்டுப்படைகளின் தாக்குதல் மிகக்குறுகிய காலத்திற்குள் குறைந்த ஆட்சேதங்களுடன் முடிவடைந்துவிடும்என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

★ ஐ. நா. வுக்கான பாரததூதர் திரு. சி. ஹரிக்கார் ஐ. நா. செயலர் திரு. பெரஸ் டி குயிலரை சந்தித்துள்ளார்.

★ சவுதி அரேபியத் தலைநகரான றியாத்மீது 3-வது ஏவுகணைத்தாக்குதல் ஈராக்கினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ அமெரிக்க 'பட்ரியட்' ஏவுகணை ஈராக்கிய 'ஸ்கட்' ஏவுகணையை வானில் தாக்கி நிர்மூலப்படுத்தி வருவதாக சவுதி அரேபியாவை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. அறிவித்துள்ளது. வேறு இரு ஈராக்கிய ஏவுகணைகள் சவுதி தலைநகருக்கு வெளியே பாலைவனத்தில் புதையுண்டு போனதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சவூதியில் குண்டுவெடிப்பு

★ சவூதியில் இருபெரும் குண்டுவெடிப்புகள்நிகழ்ந்துள்ளதாக தெரியவருகின்றது. ஈராக்கினால் சவூதிநோக்கி செலுத்தப்பட்ட ஒரு ஏவுகணை குறிதவறிப்போய் கடலில்விழ்ந்துவிட்டது

★ மோசமான காலநிலை வளைகுடாப் பகுதியில் காணப்படுவதால் இதுவரை ஏற்பட்ட சேதவிபரங்களை துல்லியமாகக் கணிப்பிடமுடியாதிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

★ அமெரிக்க நேசப்படைகளினது ஒரே உறுதியான இலக்கு ஈராக்கின் மிக மேம்பட்டதும் வலிமையுடையதுமான 'ரீ பப்ளிக்கன் காட்' எனப்படும் ஈராக்கிய குடியரசுப் படையை தாக்குவதே என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

★ வளைகுடாப்போரில் பிரிட்டனின் பங்குபற்றலை ஆதரித்து கொமன்ஸ் சபையில் 563 வாக்குகள் ஆதரவாக கிடைத்துள்ளன. எதிராக 34 வாக்குகள் கிடைத்துள்ளன. அன்னியப்போர் ஒன்றிற்கு ஆதரவாக பிரிட்டன் செயல்படுவது குறித்து ஆதரவான வாக்குகள் கிடைத்தது பிரிட்டனின் அரசியல் வரலாறில் இதுவே முதல்முறை.

★ வளைகுடாப்பகுதியில் சமாதானம்வேண்டி மண்டல சார்பற்ற நாடுகளின் முக்கிய கூட்டம் நடைபெற்றுவருறது.

## துருக்கியில் குண்டுவெடிப்பு

★ வளைகுடாப்போரில் துருக்கி சம்பந்தப்பட்டிருப்பதைக் கண்டித்து துருக்கி தலைநகரில் மூன்று பாரிய குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

'இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் அந்நிய நாடொன்றில் கனடாவின் போர் விமானங்கள் யுத்தத்தில் ஈடுபடுவதாக வளைகுடாவில் நிலைகொண்டிருக்கும் கனடாவின் படைகளின் தளபதி கொமாண்டர் சென் சம் மோரிஸ் தெரிவித்துள்ளார்.

★ உலகப்போராக ஈராக் - அமெரிக்க யுத்தம் விரிவுபடுவதால் அதனைத் தடுக்க சகலமக்களும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வத்திக்கான சென் பீட்டஸ் தேவாலயத்தில் ஈராக் போரில் இறந்தவர்களுக்கான பாடல் பூசையில் பாப்பரசர் புனித அருளப்பர் சின்னப்பர் வேண்டுதல் விடுத்துள்ளார்.

★ ஈராக் யுத்தத்தில் ஈடுபடுத்த நாற்பது நடமாடும் ஸ்கட் ஏவுகணைகளை தயார்நிலைக்கு கொண்டு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

★ வளைகுடா யுத்தம் முடிவதற்கான அறிகுறிகள் தெரியாவிட்டாலும் ஒரு சில தினங்களில் முடிந்துவிடுமென பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேயர் தென் இங்கிலாந்திலுள்ள செக்கர்ஸ் தேவாலயத்தில் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

★ ஈராக் யுத்தத்தில் அமெரிக்கா மேலும்ஒரு அணுவாயுதத்தை பயன்படுத்தாது என பெல்ஜியத்துக்கான அமெரிக்க தூதுவர் ஆபிரஹாம் பிறிமோர் பத்திரிகையாளருக்கு தெரிவித்தார்.

(எஸ்)

## தற்பாதுகாப்பு மிக அவசியம்!

"தமிழர் வாழும் பிரதேசம் முழுவதும் புலிகள் உலாவரும் பூமி" என்ற முடிந்த முடிவுக்கு வந்துவிட்ட அரசும் அதன் முப்படையினரும் சர்வதேச யுத்த தர்மங்களையும் கடப்பாடுகளையும் தூசாக மதித்து காலில் போட்டு மிதித்துவிட்டு கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்களை தொடர்ந்து நடாத்தி வருகின்றனர்!

நீண்டகாலமாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் பேரழிவுகளை ஏற்படுத்தியும், திருப்தி அடையாத அரசு தற்போது "உளவியல் போர்" தொடுத்து ஈழ மக்கள் பிரச்சனையை திசைதிருப்பவும் திட்டமிட்டுள்ளது.

அரசு, தனது தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க ஊரடங்கு சட்டத்தை. விட்டுவிட்டு பிரகடனம் செய்து மூர்க்கத்தனமாக குண்டு வீசித்தாக்குவதுடன், விடுதலைப்புலிகள் பொதுமக்களை கேடயமாகப் பாவிக்கின்ற காரணத்தினாலே அவர்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாது என்று அதர்ம தத்துவ விளக்கமும் அளித்துள்ளது!

எவ்வித இலக்கும் இன்றி எங்கு எப்படி, கண்மூடித்தனமாகத் தாக்கினாலும், அதில் அழிப்பவர்கள் தமிழர்கள் என்றால் விடுதலைப் புலிகள் தானே!" என்று முடிச்சுப்போட்டு முழுத் திருப்தி அடைந்துவரும், அரச படைகளுக்கு சர்வதேச யுத்த தர்மம் ஏது? மனித நேயம் ஏது?

இத்தகைய இனத்துவேஷ கணிப்பில் ஊறிய அரசும் அதன் படையினரும், பொதுமக்கள் மீது கருணை கொண்டு "தாக்குதல் தவிர்ப்பு" செய்வார்கள் என்று எண்ணி ஏமாந்து போவதிலும் தற்காப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து தங்கியிருக்க நாமாகவே வழிதேடிக் கொள்வது விவேகமானது!

எனவே மாரி மழையில் சேதமடைந்த பதுங்குழிகள் - "என்றும் எம்மை காக்கும் உகந்த வழி" என்பதை உறுதியாக நம்பி எமது உயிர் உடல்களைப் பாதுகாப்புடன் அரசின் உளவியல் போரின் தாக்கத்திலிருந்து தப்பிப் பிழைக்க வழிதேடுவோம்!

— மயூரன்

வல்வை சேத விபரங்கள்

# 500 வீடுகள் 7 கோவில்கள் ஐந்து பாடசாலைகள் சேதம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் நான்கு நாட்களாக நடந்த வான் தாக்குதலின் போது வல்வைப் பிராந்தியத்தில் ஐந்நூறுக்கும் அதிகமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. ஏழு ஆலயங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

ஐந்து பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றும், வைத்தியசாலை ஒன்றும் ஐம்பதுக்கும் அதிகமான மீன்பிடிவள்ளங்கள் உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வல்வை சிவன் கோவில் முத்துமாரியம்மன் ஆலயம் ஆதிகோவில் வேனிற்பிள்ளையார் கோவில், புனித அந்தோனியார் ஆலயம், நெடிய காட்டுப்பிள்ளையார் கோவில் திருவில் முருகையன் ஆலயம் ஆகியவை தாக்கப்பட்டன.

சிதம்பரக்கல்லூரி, சிவகுரு வித்தியாசாலை வல்வை மகளிர் பாடசாலை, றோமன் கத்தோலிக்க பாடசாலை, வல்வை அ. மி. பாடசாலை இந்திராணி அரசினர் வைத்தியசாலை ஆகியவை சேதமடைந்துள்ளன.

## தனியார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தடுப்பூசி மருந்துகளும், தனியார் மருந்துச்சாலைகளுக்கு 30 மெற்றிக் தொன் மருந்து வகைகளும் வரவிருக்கிறது.

இம்மாதம் 26ந் திகதி சனிக்கிழமை பருத்தித்துறைக்கு இக்கப்பல் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (153)

## வட்டுக்கோட்டையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் கடையில் சாமான் வாங்கிய சமயம் வானிலை ஆராய்ச்சியாளரும், இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையுமான கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு (வயது 67) என்பவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியானார்.

இவருடன் நின்ற சங்கரத்தையைச் சேர்ந்தவரும் இரண்டு ஆண், ஒரு பெண் உட்பட மூன்று பிள்ளைகளின் தந்தையுமான தம்பு குழந்தைவேலு (58 வயது) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

வீட்டில் குளித்துக்கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி சிவஞானவதியார் சச்சிதானந்தம் (50 வயது) ஸ்தலத்திலேயே பலியானார்.

சங்கரத்தைப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் டாக்டர் எம். தெய்வேந்திரராஜா, காலஞ்சென்ற கார்த்திகேசு, க. சுந்தரமூர்த்தி, க. ஸ்ரீமுருகன் ஆகியோரின் வீடுகள் உட்பட பத்துக்கு மேற்பட்ட வீடுகளும். ஐந்துக்கு மேற்பட்ட கடைகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலில் மதில்கள், மரங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்து. பிரதான வீதியும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. (139-152-ஈ)

## காவல் அரண் மீது புலிகள் தாக்குதல்

(மட்டுநகர்)

மட்டுநகரில் உள்ள மொகாேயா என்னும் இடத்தில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமின் காவலரண் ஒன்றை நேற்று முன்தினம் காலை 6-50 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்கிச் சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. [வி)

## குமண கப்பல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களும் சிகிச்சைக்காக கொழும்புக்குச் செல்லவிருக்கிறார்கள். [152]

## தமிழ்நாடு

(1ம பக்கத் தொடர்ச்சி)

அ. இ. அண்ணா தி. மு. க. உறுப்பினர்களை வெளியேற்றுமாறு சபை காவலர்களுக்கு பணித்ததை தொடர்ந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

## இஸ்ரேல்

(1ம் பக்க தொடர்ச்சி]

வது, ஐந்து பொதுமக்கள் கொல்லபபட்டு 70 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தலைநகர்மீது பெருந்தொகையான மக்கள் வாழும் பகுதியில் 'ஸ்கட்' தாக்கிய போது இருமாடிக் கட்டிடங்கள் முற்றாக வீழ்ந்தன. (கி)

## நான்காவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குதலுக்குள்ளாகியது. இத்தாக்குதலின்போது வல்வை மகளிர் வித்தியாலயம், நெடிய காட்டுப் பிள்ளையார் ஆலயம், வேவிற் பிள்ளையார் ஆலயமும் சுற்றுடலும் பெரும் சேதமாகின.

வல்வைச்சந்தி, உதயசூரியன் கடற்கரைப் பிராந்தியம் போன்ற இடங்களிலுள்ள வீடுகளும் பெரும் சேதமடைந்தன. இத்தாக்குதலின் போது எரிகுண்டுகளும் நச்சுத்திராவகம் அடைக்கப்பட்ட பீப்பாக்களுமே பெருமளவில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி வீசப்பட்டன. மக்கள் ஏற்கனவே தமதுஇருப்பிடங்களைவிட்டு வெளியேறியமையால் உயிர் இழப்புகள் எதுவும் ஏற்படாதபோதும் பல கால்நடைகள் இத்தாக்குதலினால் இறந்துள்ளன. (51)

## எழுதுமட்டுவாளில் பொம்மர் குண்டு வீச்சு

(பளை)

எழுதுமட்டுவாளில் நேற்று முன்தினம் மாலை 5-00 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலில் குமார் என்பவரின் வீடு பலத்த சேதமடைந்தது. இரண்டு ஆடுகள் பலியாகின. ஆறு தென்னை மரங்களும் முறிந்து விழுந்தன.

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 4-30 மணிக்கு இராணுவத்தினர் இயக்கச்சி பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்படுகிறது. (வி)

## இயக்கச்சியில்

(பளை)

நேற்றுமுன்தினம் காலை 10-00 மணியக்கு இயக்கச்சிப் பகுதியில் ஹெலியும் அவ்ரோவும் தாக்குதலை நடாத்தின.

அவ்ரோவின் பீப்பா குண்டுகளுக்கு பல தென்னைமரங்கள் சரிந்தன.

## பயணிகள் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மேஜர் தாரணிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் தாரணிக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (வி]

## ஊர்காவற்றுறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் பகல் 11-30 மணிக்கு நடைபெற்ற மேற்படி மோதலில் இராணுவத்தினரிடமிருந்து ஐ. எம். றவை 60-கும், மிதிவெடிகளைக் கண்டுபிடிக்கும் கருவியும் கைப்பற்றப்பட்டன. வி-பி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.